பி.ஏ.பி. அணைகளின் நீர்மட்டம்

சோலையாறு அணை (165 அடி)
நீர்மட்டம்: 91.92 அடி
நீர்வரத்து: 811.18 கனஅடி
வெளியேற்றம்: 1355.41 கனஅடி

பரம்பிக்குளம் அணை (72 அடி)
நீர்மட்டம்: 19.28 அடி
நீர்வரத்து: 1172 கனஅடி
வெளியேற்றம்: 820 கனஅடி

பி.ஏ.பி. அணைகளின் நீர்மட்டம்

ஆழியாறு அணை (120 அடி)
நீர்மட்டம் : 56.20 அடி
நீர்வரத்து: 301 கனஅடி
வெளியேற்றம்: 233 கனஅடி

திருமூர்த்தி அணை (60 அடி)
நீர்மட்டம்: 27.75 அடி
நீர்வரத்து: 653 கன அடி
வெளியேற்றம்: 505 கனஅடி

சின்னச் சின்னதாய்

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, கோவையில் ஸ்ரீஅபிராமி செவிலியர் கல்லூரியின் சமூக சுகாதார செவிலியர் துறை சார்பில் மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்வு நடந்தது.

ஸ்ரீ அபிராமி நர்சிங் கல்லூரியில் மக்கள் தொகை விழிப்புணர்வு நிகழ்வு

■ கோவை

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, கோவை ஸ்ரீ அபிராமி செவிலியர் கல்லூரியின் சமூக சுகாதார செவிலியர் துறை சார்பில், எல் அன் டி பைபாஸ் சாலையில் கற்பகம் சிக்னல் பகுதியில் 'இளைஞர்களின் நம்பிக்கைகளையும் கனவுகளையும் நனவாக்குவோம்' என்ற உலகளாவிய கருத்தை மையமாகக் கொண்டு 2 நாள் மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்வை டீன் டாக்டர் டி.தட்சிணாமூர்த்தி, செவிலியர் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர்.ரேணுகா ஆகியோர் தொடங்கி வைத்தனர். துணை முதல்வர் காந்திமதி, பள்ளி துணை முதல்வர் டாக்டர் தமிழரசி மற்றும் நிர்வாக அலுவலர் சிவசங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

மாணவர்கள் மக்கள்தொகை கட்டுப்பாடு, பொறுப்பான குடும்ப திட்டமிடல், இனப்பெருக்க நலம் மற்றும் திட்டமிட்ட குடும்பத்தின் அவசியத்தை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பினர். மேலும், திட்டமிட்ட குடும்பத்தின் முக்கியத்துவம், ஆரோக்கியமான குடும்பம் மற்றும் வளமான சமுதாயத்தை உருவாக்க மக்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர். இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே சிறந்த வரவேற்பை பெற்றதுடன், மக்கள்தொகை நிலைப்படுத்தல், பொறுப்பான மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் முக்கியப்பங்கு குறித்து விழிப்புணர்வை வெற்றிகரமாக ஏற்படுத்தியது.

ஏற்பாடுகளை பேராசிரியர்கள் கவிதா, ராஜேஸ்வரி ஆகியோர் தலைமையில்,சமூக சுகாதார செவிலியர் துறையினர் செய்திருந்தனர்.

பரதநாட்டிய அசைவுகள் மூலம் கணிதப் பாடம் குறித்த டாக்டர் ஜனனி சுரேஷ் ராமின் 'மூவ் த்ரூ மேத்' புதிய புத்தகம் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள்.

பரதநாட்டிய கலைஞர் ஜனனி சுரேஷ்ராமின் 'மூவ் த்ரூ மேத்' புத்தகம் வெளியீடு

■ கோவை

பரதநாட்டிய கலை மூலம் கணிதத்தை கற்பிக்கும் 'மூவ் த்ரூ மேத்' என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா கோவையில் நேற்று நடைபெற்றது. பிரபல கலைஞர் மற்றும் சிந்தனையாளர் ராதே ஜகி, முழுமையான கல்வியின் முன்னோடியான மணிமேகலை மோகன் ஆகியோர் இணைந்து இப்புத்தகத்தை வெளியிட்டனர். முன்னதாக, லாவண்யா சங்கர் வரவேற்றார். அனாதி அறக்கட்டளையின் இணை நிறுவனரும் ஆராய்ச்சியாளருமான ஸ்மிருதி ரேகா ஆதி நாராயணன் வாழ்த்திப்பேசினார். ஜெர்மனியைச் சேர்ந்த மெக்கானிக்கல் பொறியியலாளரும், பரதநாட்டிய கலைஞரும், ஆராய்ச்சியாளருமான ஜனனி சுரேஷ் ராம், கடந்த சில ஆண்டுகளாக கணிதம், நடன அசைவு மற்றும் உடல்சார்ந்த கற்றல் ஆகியவற்றின் சந்திப்பைப் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்து வருகிறார். அவர்களுடைய இந்த நீண்டகால ஆராய்ச்சியின் பயனாக தற்போது 'மூவ் த்ரூ மேத்' என்ற புதிய கையேடு நூல் உருவாகியுள்ளது.

இந்நூல் பரதநாட்டியத்தின் செழுமையான அசைவுக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு, அசைவுகளால் ஈர்க்கப்பட்ட செயல்பாடுகள் மூலம் அடிப்படைக் கணிதக் கருத்துகளை குழந்தைகளுக்கு மிக எளிமையாக அறிமுகப்படுத்துகிறது. கல்வியாளர்கள், பெற்றோர், வழிகாட்டிகள் மற்றும் முக்கியமாக 5–10 வயதுடைய குழந்தைகளுக்காக இந்த புத்தகம் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒன்பது அத்தியாயங்களில் வடிவங்கள், உருவாக்குதல், எண் அறிவு, கணிதச் செயல்பாடுகள், அளவீடு, தரவு பகுப்பாய்வு மற்றும் இட, கால விழிப்புணர்வு உள்ளிட்ட 46 அடிப்படை கணிதக் கருத்துக்களை இந்த நூல் மிக விளக்கமாக எடுத்துரைக்கிறது.

நெகமம், அங்கலக்குறிச்சியில் இன்று மின் நுகர்வோர் குறை தீர் கூட்டம்

■ பொள்ளாச்சி

நெகமம், அங்கலக்குறிச்சி கோட்ட அளவிலான மின் நுகர்வோர் குறைதீர் கூட்டம் இன்று (ஜூலை 15) காலை 11 மணி முதல் மதியம் ஒரு மணி வரை நடைபெறுகிறது. நெகமம் மற்றும் அங்கலக்குறிச்சி கோட்ட அலுவலகங்களில் நடைபெறும் இக்கூட்டத்தில், நெகமம் மற்றும் அங்கலக்குறிச்சி மின் கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மின் நுகர்வோர் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என, செயற்பொறியாளர்கள் அய்யப்பராஜன் (நெகமம்), எஸ்.வி.சரவணன் (அங்கலக்குறிச்சி) ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கவியருவியில் சீரான நீர்வரத்து சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி

■ பொள்ளாச்சி

ஆழியாறு கவியருவியில் சீரான அளவில் நீர்வரத்து உள்ளதால், சுற்றுலா பயணிகள் குளிக்க 4 மாத இடைவெளிக்கு பிறகு வனத்துறையினர் அனுமதி அளித்துள்ளனர்.

பொள்ளாச்சியிலிருந்து வால்பாறை செல்லும் சாலையில், ஆழியாறு அணையின் மேற்கு கரைப்பகுதியில் கவியருவி உள்ளது. வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அருவிக்கு தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். அருவிக்கு நீர்வரத்து குறைந்ததால் கடந்த மார்ச் 13-ம் தேதி அருவி மூடப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 4 மாதங்களாக கவியருவிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்திருந்தனர். இந்நிலையில், வால்பாறையில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததால் கவியருவியின் நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள நீரோடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அருவியில் நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக, பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை தடை விதித்து இருந்தது.

தற்போது, வால்பாறை பகுதியில் மிதமான மழைப்பொழிவு இருப்பதால், அருவியில் பாதுகாப்பான நீர்வரத்து காணப்படுகிறது. இதையடுத்து, இன்று (ஜூலை 15) முதல் கவியருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் அனுமதி அளித்துள்ளனர்.

தும்மனட்டி பகுதியில் பயிர் மற்றும் நகைக் கடன்களை முழுமையாக ரத்து செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்.

படம் ஆர்.டி. சிவசங்கர்.

ஊட்டி அருகே தும்மனட்டி கிராமத்தில்

பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

■ ஊட்டி

பயிர் கடன் மற்றும் நகை கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி, ஊட்டி அருகே உள்ள தும்மனட்டியில், 11 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பயிர் கடன் தள்ளுபடி நடைமுறையில் பல்வேறு குளறுபடிகள் இருப்பதால், பெரும்பாலான விவசாயிகள் பயன்பெறவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, ரூ.50ஆயிரத்திற்கும் அதிகமாக கடன் பெற்றுள்ள பலரது கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படாததால், அதிருப்தியில் உள்ளனர்.

இதையடுத்து, பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக நீலகிரி மாவட்டத்திலும் விவசாயிகள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதில், தும்மனட்டி பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், பயிர் கடன் மற்றும் நகை கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்திற்கு 11 கிராமங்களின் தலைவர் நடராஜ் தலைமை வகித்தார். செயலாளர் ராஜாமணி, துணைத் தலைவர் பாபு, பொருளாளர் சுப்பிரமணி மற்றும் தொதநாடு சீமை செயலாளர் தர்மன், விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 18–வது பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிய தொழிலதிபர் கே.சங்கர் உள்ளிட்டோர்.

கற்பகம் பல்கலைக்கழகத்தில் 18-வது பட்டமளிப்பு விழா

■ கோவை

கோவை கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல், கட்டடவியல் மற்றும் மருந்தியல் புல மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

வேந்தர் கு.ராமசாமி தலைமை வகித்தார். கற்பகம் கல்வி நிறுவனங்களின் தலைவர் ராச.வசந்தகுமார், முதன்மைச் செயல் அலுவலர் க.முருகையா, துணைவேந்தர் சு.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கரூர் ஸ்ரீரெங்கா பாலிமர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரர் கே.சங்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, பட்டங்களை வழங்கி உரையாற்றினார். அவர் பேசும்போது, "இளைஞர்களின் பொதுநலப் பங்களிப்பும், தியாகவுணர்வும் இந்தியாவின் புகழை உலக அரங்கில் மேலும் உயர்த்த வேண்டும். அவர்கள் நாட்டுக்குச் செய்யவேண்டிய அடிப்படைக் கடமைகள் குறித்த பொறுப்புணர்வைக் கொண்டிருக்க வேண்டும். தெளிவான செயலாக்கத்துக்குக் கல்வியும், ஆராய்ச்சியும் துணைசெய்ய வேண்டும். தொழில் நுட்ப வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகளுடன், அனைவரும் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்குரிய வலுவான நிலையான சமூக, பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்படுவதற்கு இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும்" என்றார்.

விழாவில், 9 ஆய்வாளர்களுக்கு முனைவர் பட்டமும், 16 மாணவர்களுக்குத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது. 1,038 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில், பதிவாளர் பீ.வீ.பிரதீப், தேர்வாணையர் ப.பழனிவேலு மற்றும் தமிழரசி, அமுதா, கதிரவன், குமுதா, ராகவி, ஜனகமாயா தேவி, பார்த்தசாரதி உள்ளிட்ட முதன்மையர்களும், துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

கோட்டூர் அருகே விவசாய கிணற்றில் விழுந்த காட்டுப் பன்றிகளை மீட்கும் பணியில் ஈடுபட்ட வனத்துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர்.

70 அடி ஆழ விவசாய கிணற்றில் விழுந்த 10 காட்டுப் பன்றிகள் மீட்பு

■ ஆனைமலை

ஆனைமலை ஒன்றியம், கோட்டூர் பேரூராட்சிக்கு உட்பட்ட தங்கம் நகர் பகுதியில் சிவராஜ் என்பவருக்கு சொந்தமான தோட்டம் உள்ளது.

நேற்று முன்தினம் மாலை, தோட்டத்தில் ஆட்கள் வேலை செய்து கொண்டிருந்தபோது, தெருநாய்கள் கூட்டமாக காட்டுப் பன்றிகளை துரத்தி வந்துள்ளன. அவற்றிடம் இருந்துதப்பிக்க முயன்றபோது 10 காட்டுப் பன்றிகள் அருகில் இருந்த 70 அடி ஆழமுள்ள கிணற்றில் விழுந்து தண்ணீரில் தத்தளித்தன. இதனைக் கண்ட தோட்டத்து உரிமையாளர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த வனத்துறையினர், தீயணைப்பு துறையினர் தண்ணீரில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த காட்டுப் பன்றிகளை வலையை கொண்டு மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் 4 மணி நேர போராட்டத்துக்கு பின்னர் பன்றிகளை உயிருடன் மீட்டனர். பின்னர் அவை சின்னார் வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டன.

ujjivan SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.8/1359, மேட்டுப்பாளையம் ரோடு, பூ மார்க்கெட், RS புரம், கோயம்புத்தூர் தமிழ்நாடு-641001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1188210040000008 / 1.Mr.வெள்ளியங்கிரி பழனி 2.Mrs.வெண்ணிலா	(i) 09.10.2021 (ii) 08.10.2021 அன்றுள்ளபடி ₹ 9,48,521/- (ரூபாய் ஒன்பது லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து ஐநூற்று இருபத்து ஒன்று மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 19.04.2025 & நேரடி சுவாதீனம் - 11.07.2025	13.07.2026 அன்றுள்ளபடி ₹ 15,53,655.15 (ரூபாய் பதினைந்து லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா பதினைந்து மட்டும்)	₹ 17,18,000/- (ரூபாய் பதினேழு லட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்)	₹ 1,71,800/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து ஒன்றாயிரத்து எண்ணூறு மட்டும்)

சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட **S.F.எண்.46/2, பிள்ளையம்பாளையம் கிராமம்** என்னும் முகவரியில் அளவுகள்: வடக்கு தெற்காக இருதிசையிலும் 10.0 அடி, கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 10.4 அடி, கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 10.8 அடி, **ஆகமொத்தம் 106 சதுர மீட்டர் அல்லது 1140 சதுர அடி நிலம்**, அதனுடன் அனைத்து உபகரணங்கள், அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு மேற்கு ரோடுக்கு வடக்கு, S.F.எண்.334/15-க்கு கிழக்கு, S.F.எண்.334/6-க்கு தெற்கு, S.F.எண்.334/13-க்கு மேற்கு.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது Mr.வெள்ளியங்கிரி-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 05.08.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 04.08.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	03.08.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. **(தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709)** உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பிட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 15.07.2026 ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ப்ருடென்ட் ARC லிமிடெட்

பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 611, D மால், மனை எண். A-1 நேதாஜி சுபாஷ் பிளேஸ், பிதாம்புரா, புது டெல்லி-110 034. **Tel: +91-11-45320000 | Email Id: info@prudentarc.com**
CIN: U74900DL2011PLC225445

கோரிக்கை அறிவிப்பு

பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் (இணை-கடன்தாரர்கள்) வங்கியிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் வசதிகளுக்கான அசல் மற்றும் வட்டித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் தவறியுள்ளனர் என்பதையும், அத்தகைய கடன்கள் "செயல்படாத சொத்துக்களாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இந்த அறிவிப்பின் வாயிலாகத் தெரிவிக்கிறோம். "நிதிச் சொத்துக்களின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையை வட்டி அமலாக்கச் சட்டம் 2002"-ன்கீழ், இவர்களுக்குத் தெரிவிருந்திருந்த கடைசி முகவரிகளுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன, ஆயினும், அவ் அறிவிப்புகள் விநியோகிக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன, எனவே, இப்பொது அறிவிப்பின் வாயிலாக அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

வ. எ ண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு	சொத்துக்கள் விவரங்கள்/அமலாக்கம் செய்யவுள்ள பாதுகாப்பு சொத்துக்களின் முகவரி	அறிவிப்பு நாள்	NPA நாள்	நிலுவைத் தொகை (அறிவிப்பு தேதியின்படி)
12	" RRK GARMENTS / UGTIRMS00000419 88"	சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் சார்-பதிவு அலுவலகம், தாராபுரம் தாலுகா, கொலுமங்குலி கிராமம், பட்டா எண். 496, Re. S.F.No.240/2 (இதில் பழைய S.F.No. 211/A மற்றும் S.F.No.212, இதில் P. Hectare 5.20.00, இதில் P. Acre 12.84). இதில் புதிய S.F.No. 240/2A1A1A1, இதில் P. Hectare 4.77.10, Kist Rs. 9.54, (இதில் பழைய S.F.No. 211/A மற்றும் S.F.No. 212), இதில் சொத்து லேஅவுட் ஒப்புதுல் வழங்கியது இயக்குநர் நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம் அத்தாரிட்டி, சேலம் மனட்டமம் ஒப்புதல் எண். Ma.Va/Ma.(se) No.156/2019, வரைமுறை எண். 146/2019, மற்றும் "ஸ்ரீ சாய் ராம் நகர்" என்ற பெயரில் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டது, லேஅவுட் பிளான்படி சைட் எண். 329 **பின்வரும் அமைந்துள்ளது: வடக்கு:** 23 அடி அகல கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலை, **தெற்கு:** சைட் எண். 330, **கிழக்கு:** 23 அடி அகல தெற்கு-வடக்கு லேஅவுட் சாலை, **மேற்கு:** சைட் எண்.328. **அளவுகள்:** கிழக்கு-மேற்கு தெற்கு அனைத்து பக்கமும் - 40 அடி தெற்கு-வடக்கு இருபக்கமும் - 50 அடி மொத்த பரப்பு 2000 சதுர அடி சமமான 185.80 சதுர மீட்டர் காலி நிலம், மற்றும் சாலைகள் உள்செல்வதற்கும் வெளியேறுவதற்கும் வழக்கமான பாதைகளை பயன்படுத்துவதற்கு உரிமை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட மற்ற அனைத்து அடிப்படை உரிமைகள். மேற்கூறிய சொத்து கொலுமங்குளி பஞ்சாயத்து மற்றும் தற்போது புதிய துணை பிரிவு S.F. No. 240/57A1A1A1A1-க்குட்பட்டது.	02-06-2026	02-07-2025	Rs.6,13,509 (21/05/2026)
13	"MK GARMENTS / UGDHAMS00000013 259"	சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமல்பேட் சார் பதிவு மாவட்டம், உடுமல்பேட் தாலுகா, சின்னவீராம்பட்டி கிராமம், S.F.No.34 மற்றும் P.Hec.6.25.5 (P.A.15.46) இதில் வடக்கு பக்கம் P.A.7.00 மற்றும் இதன் 3.00 நிலம் எல்லைகள் மற்றும் பின்வரும் எல்லைகள்: வடக்கு - மேற்கூறிய சர்வே எண்ணில் மகாலிங்கம் மீதமுள்ள நிலம், தெற்கு - S.F.No.30, கிழக்கு S.F.No.35-ன் இட்டெரி, மேற்கு - S.F.No.31, இதில் P.A.3.00 இதன் கிழக்கு பக்கம் P.A.1.00 ஒப்புதல் வழங்கியது சின்னவீராம்பட்டி பஞ்சாயத்து, எண். 1-2002/2003 மற்றும் ஸ்ரீ மாசானியம்மன் நகர் என்ற பெயரில் லேஅவுட்டாக உருவாக்கப்பட்டது, சைட் எண். எல்லைகள் **பின்வரும் எல்லைகள்: தெற்கு :** தெற்கு-வடக்கு 20 அடி அகலம், கிழக்கு-மேற்கு சாலை, **வடக்கு:** எஸ்.எப்.எண். 34/2, **கிழக்கு:** சைட் எண். 3, **மேற்கு:** கிழக்கு-மேற்கு 20 அடி அகல தெற்கு-வடக்கு சாலை, இதில் வடக்கு பக்கம், கிழக்கு-மேற்கு - 30 அடி தெற்கு பக்கம் கிழக்கு-மேற்கு 30 அடி கிழக்கு பக்கம் தெற்கு-வடக்கு 30 அடி மேற்கு பக்கம் தெற்கு-வடக்கு 30 அடி அனைத்தும் சேர்த்து, பரப்பளவு 900 சதுர அடி (83.61 சதுர மீட்டர்) காலி வீட்டு சைட் மற்றும் அனைத்து லேஅவுட் சாலைகள் உபயோக உரிமைகள் மற்றும் லேஅவுட் மற்றும் வழக்கமான பாதை உபயோக உரிமைகள். சின்னவீராம்பட்டி பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சொத்து. (S.F.No.34 ஆனது S.F.No.34/1A1 உட்பிரிவாக பிரிக்கப்பட்டது, தற்போதுபடி துணைபிரிவு S.F.No.34/1A1A1A1, பட்டா எண்.156)	02-06-2026	01-08-2025	Rs.5,85,667 (20/05/2026)
14	"SAI ARUN ELECTRICAL & SERVICE CENTER / HCFD-HASEC0000103622 2"	திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் சார்-பதிவு மாவட்டம், தாராபுரம் தாலுகா, தளவாய்பட்டினம் கிராமம், நத்தம் சர்வே எண் 462/8, தளவாய்பட்டினம் டவுன் மாநகராட்சி, **பின்வரும் எல்லைகள்: தெற்கு :** தெற்கு-வடக்கு 20 அடி அகலம், கிழக்கு-மேற்கு சாலை, **வடக்கு:** எஸ்.எப்.எண். 34/2, **கிழக்கு:** சைட் எண். 3, **மேற்கு:** கிழக்கு-மேற்கு 20 அடி அகல தெற்கு-வடக்கு சாலை, 96 சதுர மீட்டர் நிலத்தை கொண்டது, இதில் தளவாய்பட்டினம் பஞ்சாயத்து வரி எண். 3086, கதவு எண். 10/188, இதில் கட்டப்பட்ட வீட்டு சொத்துடன் மற்றும் செக்கு பாண்டி விவரங்கள் **எல்லைகள்: வடக்கு :** நத்தம் கலியிதத்து நிலம், **கிழக்கு:** புஷ்பா வீட்டு நிலம் **தெற்கு:** தென்வாடல் குளம் நிலம் **மேற்கு:** இருபக்கங்கள் மத்திய கிழக்கு 12.0 மீட்டர் (40 அடி), இருபக்கம் தென்வாடல் 8.0 மீட்டர் (26 அடி) மொத்த பரப்பு 96 சதுர மீட்டர் சமமான 1033 சதுர அடி வீட்டு சைட் முழுவதும், மற்றும் மேற்கூறிய வீட்டு சைட்டில் கட்டப்பட்ட வீடு மற்றும் அதன் அறைகள், மற்றும் மின்சாரம் இணைப்பு எண். 03-367-002-1272 மின்சார மீட்டர்படி மற்றும் மின்சார விளக்குகள் மற்றும் அதன் பாதுகாப்பு வைப்பு மற்றும் அனை